செ.வெ.எண்:08 நாள்:06.01.2018

**அரியலூர் மாவட்டத்தில் 440 பொது விநியோகத்திட்ட அங்காடிகளில் 2,13,750 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளும், 173593 குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளும் வழங்கப்படுகிறது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அண்ணா நகர் பொதுவிநியோகத் திட்ட அங்காடியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பொங்கல் பரிசுத் தொகுப்பு 2018 மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகள் பயனாளிகளுக்கு வழங்கும் விழா மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில், 1175 பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளையும், பொங்கல் பரிசுத் தொகுப்பினையும் வழங்கி **மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா** அவர்கள் பேசியதாவது :-

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சீறும் சிறப்புமாக கொண்டாடிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுவிநியோகத் திட்டத்தில் பயன்பெறும் 1.84 கோடி அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை அறிவித்துள்ளார்கள்.

அன்படி பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அரிசி பெறும் 1,83,27,600 குடும்ப அட்டைதாரர்களுக்கும், 63,118 காவலர் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை வாழ் அகதிகள் முகாமிலுள்ள 19,543 இலங்கைவாழ் தமிழர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பினை அறிவித்துள்ளார்கள். இப்பொங்கல் பரிசு தொகுப்பில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீளமுள்ள கரும்பு துண்டு தலா 20 கிராம் முந்திரி, திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியன அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த வகையில் தமிழகத்தில் செயல்படும் 34000-க்கு மேற்பட்ட பொதுவிநியோகத்திட்ட அங்காடிகளில் 18,400 மெ.டன் பச்சரிசி, 18,400 மெ.டன் சர்க்கரை ஆகியன மாதந்தோறும் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களுடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்படவுள்ளது.

இதுபோலவே 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவற்றை ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.30/- மதிப்பில் ரூ.1.84 கோடிக்கு பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கப்படவுள்ளது. மேலும், குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.15/- மதிப்புள்ள கரும்பு துண்டு ரூ.1.84 கோடி செலவில் விநியோகிக்கப்படவுள்ளது.

பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் பொங்கல் பண்டிகையை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.5.210 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பயனடைய ஆணை வழங்கியுள்ளார்கள்.

இதன்படி பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் காவலர் குடும்ப அட்டைம ற்றும் முகாமில் தங்கியுள்ள இலங்கை வாழ் தமிழர் ஆகியோருக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கிட தமிழ அரசு ரூ.210 கோடி ஒதுக்கியுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீளமுள்ள கரும்பு, 20 கிராம் முந்திரி, 20 கிராம் திராட்சை மற்றும் 5 கிராம் ஏலக்காய் ஆகியவற்றை ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.45/- வீதம் ரூ.86,56,875 நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் 440 பொதுவிநியோகத் திட்ட அங்காடிகளில் 2,13,750 குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கிட ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபடி, நியாயவிலைக்கடைகள் மூலம் சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் இன்று முதல் அரியலூர் மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பொங்கல் பண்டிகைளை சீறும் சிறப்புமாக கொண்டாடிட கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ அரசு அறிவித்துள்ள விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் அரியலூர் மாவட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 173593 வேட்டி, சேலைகளை அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் பொதுவிநியோகத்திட்ட அங்காடிகள் மூலம் வழங்கப்பட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொதுவிநியோகத்திட்டம் வருமான அடிப்படையில் இல்லாமல், ஏழை, எளிய மக்கள் அனைவரும் பயன் அடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அரியலூர் கோட்டாட்சியர் மு.மோகனராஜன், மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கதிரேசன், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மேலாளர் உமாமகேஸ்வரி, அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி, கூட்டுறவு சார்பதிவாளர் எல்.கருப்புசாமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், கோவிந்தபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் தலைவர் க.வெள்ளமுத்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநர்கள் ஜீவாரெங்கநாதன், வேலுச்சாமி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

முடிவில், பொதுவிநியோகத் திட்டம் துணைப்பதிவாளர் கே.கே.செல்வராஜ் நன்றி கூறினார்.

## செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.